-1-

அ1/000609/22

சுருக்கம்


பொதுப்பணிகள்– தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலப்பதிவேடுகள் சார்நிலைப்பணி– நிலஅளவைப் பதிவேடுகள் துறை – திருநெல்வேலி மாவட்டம் – செல்வி நா.விஜயபாரதி (த/பெ காலஞ்சென்ற திரு.இரா.நாகசெல்வம்) என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது– பணிவரன்முறைசெய்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்:02

நாள்: 07.01.2022
திருவள்ளுவராண்டு 2052,
பிலவ வருடம், மார்கழி–23

படிக்கப்பட்டது:

இணை இயக்குநர் மத்திய நில அளவை அலுவலகம் சென்னை-5 12 JAN 2022

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28.01.2020.
2. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் கடித எண். ந.க.ர1/5197/2020 (நி.அ), நாள் 09.08.2021.

***********

ஆணை:

திருநெல்வேலி மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில், நிலஅளவராக பணியாற்றிய போது 24.11.2016 அன்று காலமான திரு.இரா.நாகசெல்வம் என்பவரின் மகள் செல்வி.நா.விஜயபாரதி என்பவருக்கு கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி குருவம்மாள் என்பவர் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் திருநெல்வேலி மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 05.06.2020 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், செல்வி.நா.விஜயபாரதி என்பவரை திருநெல்வேலி மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் 05.06.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய ஆணை வேண்டி சென்னை மத்திய நில அளவை இணை இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. சென்னை மத்திய நில அளவை இணை இயக்குநரின் முன்மொழிவினை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

// த.பி.பா //

-2-

21



3. சென்னை மத்திய நில அளவை இணை இயக்குநரின் முன்மொழிவு மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் பரிந்துரை ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திருநெல்வேலி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.நா.விஜயபாரதி என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 05.06.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைசெய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 19824/க்யூ2/2021–1, நாள் 20.11.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.36542/க்யூ2/2021–1, நாள் 13.12.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை – 5.
இணை இயக்குநர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை–5.
செல்வி நா.விஜயபாரதி, இளநிலை உதவியாளர்
(சென்னை மத்திய நில அளவை இணை இயக்குநர் மூலமாக)

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச்செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

7/1/2022
பிரிவு அலுவலர்.

07.01.2022

நக அ1/609/22-1 நாள் 3. 2022

நகல் வழங்கப்படுகிறது.

பெறுநர்
செல்வி. நா. விஜயபாரதி, இ.நி.உ.
மத்திய நில அளவை அலுவலகம்.
சென்னை - 5.

இணை இயக்குநர்

14/3/2022

## சுருக்கம்

பொதுப்பணிகள்— தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலப்பதிவேடுகள் சார்நிலைப்பணி— நிலஅளவைப் பதிவேடுகள் துறை— திருநெல்வேலி மாவட்டம்— செல்வி நா.விஜயபாரதி (த/பெ காலஞ்சென்ற திரு.இரா.நாகசெல்வம்) என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது— பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டது— அரசாணைக்கு உரிய திருத்தம் வெளியிடுதல்— ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
### பணிகள் அலகு, பணி9 (2) பிரிவு

**அரசாணை (3டி) எண்: 15**

நாள்: 04.03.2022
திருவள்ளுவராண்டு 2053
பிலவ வருடம், மாசி –20

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (3டி) எண்.02, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி9(2)) துறை, நாள் 07.01.2022.
2. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் கடித எண். ந.க.ர1/1693/2022 (நி.அ) (1), நாள் 21.01.2022.

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உள்ள பத்தி 1–இல், 7வது வரி மற்றும் 10வது வரி மற்றும் பத்தி 3–இல், 3வது வரிக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:–

**திருத்தம்**

"திருநெல்வேலி மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில்", என்பதற்கு பதிலாக, "சென்னை மத்திய நிலஅளவை இணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ்" என்று திருத்தி வாசிக்கவும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
இணை இயக்குநர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை–5.
செல்வி நா.விஜயபாரதி, இளநிலை உதவியாளர்
(சென்னை மத்திய நில அளவை இணை இயக்குநர் மூலமாக)

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
அரசாணை (3டி) எண்.02, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி9(2) துறை, நாள் 07.01.2022–ன் மூல அரசாணையில் இணைப்பதற்காக.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

4/3/2022
பிரிவு அலுவலர்.
4/3/22

ந.க. அ1/609/22-(2) நாள் 3.2022

நகல் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் 14/3/22

பெறுநர்

செல்வி. நா. ராஜஜோதி,
இ.நி.2.

மத்திய நில அளவை அலுவலகம்,
சென்னை-5.

14/3/2022